TAMIL MURASU, MONDAY, 11 JANUARY 2021, PAGE 3

# 1,000 குடியிருப்பாளர்களுக்கு இலவச சுகாதாரப் பரிசோதனை

ஐம்பது வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு இலவச சுகாதாரப் பரிசோதனை வழங்கும் முன்னோடித் திட்டம் இப்போது பொங்கோல் 21 சமூக மன்றத்தில் நடைபெறுகிறது. அந்தச் சமூக மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள தொலைமருந்துக் கூடத்தில் 1,000 குடியிருப்பாளர்கள் வரை இணையம் வழி சுகாதாரப் பரிசோதனைக்காகப் பதிந்துகொள்ளலாம்.

சுகாதாரப் பரிசோதனையில் கண், இதய நோய்கள், நீரிழிவு, உடற்பருமன் ஆகிய பிரச்சினைகள் தொடர்பிலான பரிசோதனைகள் நடத்தப்படும்.

கண் பரிசோதனை இயந்திரத்தைப் பயன்படுத்தி குடியிருப்பாளர்களின் கண்களைப் படமெடுத்து, செயற்கை நுண்ணறிவு மூலம் அவர்கள் எந்த அளவுக்கு ஆரோக்கியமாக இருக்கின்றனர் என்பது உறுதி செய்யப்படும்.

இந்த மருத்துவப் பரிசோதனையை கிட்டத்தட்ட 20 நிமிடங்களில் முடித்துவிடலாம். மருத்துவப் பரிசோதனை முடிந்ததும் குடியிருப்பாளர்களுக்கு அந்த இடத்திலேயே உடல்நல அறிக்கை ஒன்று வழங்கப்படும்.

பரிசோதனையின் முடிவுகள் சிங்கப்பூர் தேசிய கண் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அங்கு கண் மருத்துவர்கள் அவற்றை மதிப்பீடு செய்வர்.

இம்மாதம் 9ஆம் தேதி தொடங்கிய இந்தக் கூடம் பிப்ரவரி 28ஆம் தேதி வரை செயல்படும்.

சமூக தொலைசுகாதாரச் சேவை என்று அழைக்கப்படும் இத்திட்டத்தை நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒன்பது பட்டக்கல்வி மாணவர்கள் தொடங்கினர்.

"கொவிட்-19 கொள்ளைநோய் எந்த அளவுக்கு முதியவர்களுக்கும் சுகாதாரப் பிரச்சினை உள்ளவர்களுக்குமான காதாரப் பரிசோதனையைப் பாதித்துள்ளது என்பதைக் கண்கூடாகப் பார்த்த நாங்கள் இத்திட்டத்தைத் தொடங்கினோம்," என்றார் திட்டத்துக்குத் தலைமை தாங்கும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் லீ கொங் சியான் மருத்துவப் பள்ளியின் முனைவர் கல்வி மாணவரான 31 வயது டாக்டர் மிஷெல் லா.

இலவச மருத்துவப் பரிசோதனையின்போது ஏதேனும் பிரச்சினை கண்டறியப்பட்டால் குடியிருப்பாளர்கள் மருத்துவமனை அல்லது பலதுறை மருந்தகத்துக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்று திட்டத்தை நிறுவியவர்களில் ஒருவரான 28 வயது திரு அல்வின் சியூ கூறினார்.

இந்தத் திட்டத்துக்கான வரவேற்பு ஊக்குவிக்கும் வகையில் இருப்பதாக அவர் தெரிவித்தார், முதல் இரண்டு வாரங்களில் மருத்துவப் பரிசோதனைக்காக ஒதுக்கப்பட்ட அனைத்து நேரங்களும் முன்பதிவு மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.